தமிழ்நாடு அரசு

## தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2021

### தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025

### B.E / B.Tech. பட்டப்படிப்பு சேர்க்கை 2021 – 2022

(தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

**விளம்பர அறிக்கை எண். 3300/TNEA/2021**

முதலாமாண்டு B.E / B.Tech பட்டப்படிப்பிற்கு விண்ணப்பங்கள் தமிழ்நாட்டில் உள்ள அரசு / அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் / அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகள் / அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகளால் ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கான 2021–22 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெற கீழ்க்கண்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: **https://www.tneaonline.org** அல்லது **https://www.tndte.gov.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவுசெய்யவேண்டும்.

இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள், தங்களின் விண்ணபத்தை சமர்ப்பிக்க ஏதுவாக தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையம் **(TNEA Facilitation Centers (TFCs)** அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

பதிவுக் கட்டணம் : பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாகசெலுத்தலாம். இணையதள வாயிலாக பதிவுக் கட்டணத்தை செலுத்த இயலாத மாணாக்கர்கள், **"The Secretary, TNEA" payable at Chennai,** என்ற பெயரில் **26.07.2021** அன்றிலிருந்து பெற்ற வரைவோலையை பதிவுக் கட்டணமாக தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையம் (TFCs)வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

கலந்தாய்வு விவரங்கள், வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் **www.tneaonline.org** இணையதள வாயிலாக மட்டுமே அறிந்து கொள்ளலாம்.

**இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய :**

| | |
|---|---|
| **ஆரம்பம்** | **26.07.2021** |
| **இறுதி நாள்** | **24.08.2021** |

மாணாக்கர்கள் இணையதளம் வாயிலாக தங்களுடைய விண்ணப்பத்தினை பதிவு செய்யும் பொழுதே அசல் சான்றிதழ்களை இணையதளம் வாயிலாக சரிபார்க்கும்பொருட்டு, தங்களுக்கு விருப்பமான தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை (TFC) மையத்தினை தேர்வு செய்து கொள்ளவேண்டும். மேற்கண்ட அசல் சான்றிதழ்களை இணையதள வாயிலாக சரிபார்க்கும்போது ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால், அந்த குறிப்பிட்ட மாணாக்கரின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் TFC மையத்திற்கு நேரடியாக வந்து சரிசெய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து TFC மையங்களிலும் போதிய அளவில் கொரானா தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்பு பிரிவினர்களான மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு பிரிவு மாணாக்கர்கள், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள் மற்றும் தொழிற்கல்வி பயின்றவர்களுக்கான கலந்தாய்வும் இணையதளத்தின் வாயிலாக மட்டுமே நடைபெறும்.

**B.Arch. / B.E., B.Tech (Lateral Entry and Partime)** பட்டப் படிப்புகள் சேர்க்கைக்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

**தொடர்பு எண்: 044 – 22351014,15, 0462 – 2912081, 82, 83, 84 & 85.**

**மின்னஞ்சல் முகவரி : care@tneaonline.org**

**செயலாளர்**
**TNEA**

ச.ம.தொ.இ. / 616 / வரைகலை / 2021